People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 17.10.2009 முதல் 31.10.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** டி.கல்லுப்பட்டி அருகே உள்ள வி.குச்சம்பட்டியைச் சேர்ந்தவர் தவசிபாண்டி இவரது மகள் பள்ளி சம்பவத்தன்று பள்ளிகூடத்துக்க போகவில்லை இதனால் ஆசிரியர் திட்டுவாரே என நினைத்து வீட்டில் யாருமில்லாத நேரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து டி.கல்லுபட்டி போலீஸார் விசாரனை நட வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 2. | 17.10.09 | **தேனி மாவட்டம்:** வீரபாண்டி அருகே உள்ள தர்மபுரி வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் தெல்வேந்திரன், விவசாயி இவரது மகள் நாகலட்சுமி, இதே ஊரைச் சேர்ந்த ஒய்வு பெற்ற ராணுவவீரர் சங்கரின் மகன் ராம்குமார்(23) மதுரையில் உள்ள தனியார் பால்டெக்னிக் கல்லுரியில் 3ம் ஆண்டு படித்து வருகின்றனர். ராம்குமாரம் நாகலட்சுமியும் ஒரு ஆண்டாக காதலித்து வருகின்றனர். இந்நிலையில் நாகலெட்சுமி கர்ப்பமானர். இது குறித்து தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 3. | 17.10.09 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே உள்ள வடபுதுப்பட்டி ரைஸ்மில் தெருவைச் சேர்ந்தவர் ராஜா இவரது மனைவி விரலெட்சுமி(31) வீரலெட்சுமியின் கணவர் வரதட்சனை கேட்டு மிரட்டியதாக தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 4. | 17.10.09 | **நிலகிரி மாவட்டம்:** பந்தலூர் வட்டத்தில் –––கிராமத்தைச் சேர்ந்த கொந்தமங்கலம் கோட்டுர், ஆகிய பகுதிகளில் ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது 1.47 ஏக்கர் நிலத்தை மயான பூமியை வேளி அமைத்து பாதுகாத்து தரக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார். | தலீத் எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 5. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** சோலை அழகுபுரத்தைச் சேர்ந்தவர் நாகலட்சுமி(23) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த காளிதாசுக்கும் திருமணம் நடந்தது. நாகலட்சுமியை கூடதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை டவுண் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 6. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரத்தைச் சேர்ந்தவர் சகிலாபானு இவருக்கும் பெங்களுரைச் சேர்ந்த ஹாஜகானுக்கும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. தற்போது சகிலாபானுவிடம் கணவர், | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவரின் குடும்பத்தார் கூடுதல் வரதட்சனை கேட்டதாக திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் புகார். | | |
| 7. | 17.10.09 | **மதுரை மாவட்டம்:** நடுமுதலை சேர்ந்தவர் சித்ரா, இவருக்கும் குருவித்துறையை சேர்ந்த தங்கபாண்டிக்கும் 3 வரடமுன்பு திருமணம் நடந்தது. தற்போது கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்துவதாக உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 8. | 17.10.09 | **ராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி தெலுச்சகாத்தை நல்லூரைச் சேர்ந்தவர் கண்ணுசாமி இவரது மகன் ஆறுமுகம் கொலை வழக்கில் கைதாகி மதுரை மத்திய சிறைசாலையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் இவர் புற்றுநோயால் அவதிபட்டு மருத்துவமனையில் இறந்தார். இது குறித்து கரிமேடு காவல் நிலையத்தில் புகார். | காவல் மரணம் | மாலை மலர் |
| 9. | 19.10.09 | **மதுரை மாவட்டம்:** திருத்தங்கலை சேர்ந்தவர் ரவிக்குமார் இவருக்கும் செல்விக்கும் திருமணமாகி 3 வருடங்கள் ஆகிறது, 11/2 வயது பெண் குழந்தை உள்ளது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனை, இந்நிலையில் செல்வி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கீழவளவு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 10. | 19.10.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** பள்ளிப்பட்டியில் ஆனந்தன் என்பவர் அரிசி ஆலை ஒன்றில் அரசு அனுமதி பெறாமல் நடத்திய பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் 32பேர் பலி அனுமதியின்றி பட்டாசு கடை நடைபெற்றுள்ளதை கண்காணிக்காமல் பெறுப்பற்ற அரசியல் அதிகாரிகள் 7 பேர் சஸ்பெண்ட். | அரசு தன் கடடை செய்யாமை | தீக்கதிர் |
| 11. | 19.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் தாக்கி படகுகளை சேதப் படுத்தி விரட்டியடித்தனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 12. | 19.10.09 | **தேனி மாவட்டம்:** தேவாரம் அழகர் நாயக்கன்பட்டியை சேர்ந்த மணி என்பவரது மனைவி பவுன்தாய் அடிக்கடி உடல் நலக்குறைவு காரணத்தால் பவுன்தாய் விஷம் குடித்தார், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் காலதாமதமாக சிகிச்சை அளித்ததால் பவுண்தாய் இறந்தார். | அரசு தன் கடமை செய்யாமை | தினமலர் |
| 13. | 19.10.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணியை அடுத்த இரும்பேடு கிராமத்தை சேர்ந்த கமலதாஸ், கனிமொழி இவரது தலை பிரசவத்துக்கு தச்சூர் ஆரம்ப சுகாதார | மருத்துவர் தன் கடமை செய்யாமை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் சேர்க்கப்பட்டார் தீபாவளி என்பதால் டாக்டர்கள் சீக்கிரமாக வீட்டிற்கு சென்றதால் இவரது பிரசவத்தை நர்சுகள் பார்த்ததால் தாயும், சேயும், இறந்தனர். இது தொடர்பாக கிராம மக்கள் சாலை மறியல் நடத்தினர். | | |
| 14. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே எம்.கல்லுபட்டி மதிப்பனூரைச் சேர்ந்தவர் பானுமதி(21), இவர் தனத அக்கா வீட்டில் இருக்கும் போது அதே பகுதியைச் சேர்ந்த ஜோதிமணி என்பவர் பானுமதியை பாலியல் பலாத்காரம் செய்தார். இது குறித்து திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 15. | 20.10.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை பகுதிகளில் பெரும்பாலான ரேசன் கடைகளில் ரேசன் அரிசியை கடத்தி கொள்ளை லாபம் சம்பதிக்கும், அளுங்கட்சி பிரமுகர் ஆதரவோடு அரிசி கடத்தப்படுகிறது. இது குறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டகுழு வலியுறுத்தியுள்ளது. | ரேஷன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 16. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தில் மாமூல் கேட்டு இரும்பு வியாபாரி களஞ்சியம்,ரௌடிகள் மனாயர், கனி, ராமமூர்த்தி, சத்தியமூர்த்தி, 4 பேர் மாமூல் கேட்டு களஞ்சியத்தின் மனைவியை தாக்கினர், இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 17. | 20.10.09 | **சென்னை மாவட்டம்:** ஜோலார்பேட்டையைச் சேர்ந்தவர் சமரசம் இவர் பி.எஸ்.என்.எஸ்.டெலிபோன் நிறுவனத்தில் என்ஜீனியராக பணியாற்றுகிறார். இவரது மகள் மதியரசி(20), இவர் சென்னை கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரியில் நான்காம் ஆண்டு எம.பி.பி.ஸ் படித்து வருகிறார் இவரும் இவரது தாய்மாமான் கலைவேந்தனும், காதலித்து வந்ததாகவும் தீடீரென மதியரசி வேறு பைனுடன் திருமணம் பேசி முடிவு செய்ததை கேள்விபட்ட கலைவேந்தர், மதியரசியை கல்லூரி வளாகத்தில் வைத்து கத்தியால் குத்தினார். இது குறித்து கீழ்பாக்கம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 18. | 20.10.09 | **மதுரை மாவட்டம்:** தேவகோட்டையில் உள்ள கிராம நிர்வாக அதிகாரி கூட்டுறவு சிக்கன நாணய சங்கா,செயலாளராக இருப்பவர் மெய்யப்பன். இவர் கிராம நிர்வாக அதிகாரிகள் பெயரில் போலி ஆவணங்கள் செய்து 4.1/3 லட்சம் மோசடி செய்தவரை கூட்டுறவு குற்றபுலனாய்வு துறை | மோசடி | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்ஸ்பெக்டர் ஞானசம்பந்தம் கைது செய்தார். | | |
| 19. | 20.10.09 | **தேனி மாவட்டம்:** உந்தபாளையம் வட்டம் வடுகபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயமாண்டி(22), துரைராஜ(27), சிவகுமார்(19), தீபாவளி நேரத்தில் ஆதிக்கசாதியினர் வீதியில் வெடி வெடித்தனர். ஆதிக்க சாதியினர், தலீத் இளைஞர்களை குடித்து விட்டு தாக்கியும், சாதியைச் சொல்லி திட்டியும் உள்ளனர் இது குறித்து தென்கரை காவல் நிலையத்தில் புகார். | தலீத் எதிரான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 20. | 21.10.09 | **கோவை மாவட்டம்:** அவிநாசி ரோடு டெசிடென்சி ஒட்டல் எதிரில் வசித்துவரும் தொழிலதிபர் சூரியகுமார் மகன் வெங்கட்ராம கிருஷ்ணன்(எ)வெங்கட்ராம்த(43), இவர் 16 ஆண்டுகளுக்கு முன்பு விவேக் கொலை வழக்கில் ஆயுள்தண்டனைப்பெற்று கோலை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் இந்நிலையில் வெங்கட்ராம், கோவை சிறையில் தூக்கபோட்டு தற்கொலை செய்து கொண்டார். | காவல் நிலைய மரணம் | தினகரன் |
| 21. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பர்மா காலனியைச் சேர்ந்தவர் மரியன்பீவி(55), இவரது மகள் நக்கர்நீஷா இவர்கள் வீட்டின் அருகே வசித்து வருபவர் முகமது அலி(35) ஏற்கனவே திருமணமானவர் இவர் நக்கர்நிஷாவை இரண்டாவது திருமணம் செய்து கொடுக்குமாறு மரியன் பீவியிடம் கேட்டபோது அவர் மறுத்ததால் முகமது அலி மரியன்பீவியை கத்தியால் கண்ணில் குத்தினார் இதில் அவரது விழி பிதுங்கியது. இது குறித்து மேலூர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 22. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள இ.மலம்பட்டியில் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்துக்குள்ளே மதுபாட்டில்கள், ஆணுறைகள், கிடந்ததால் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிர்ச்சி அடைந்தனர், பள்ளிக்கு சுற்றுசுவர் கட்ட வலியுறுத்தி நாளை மறியல் போராட்டம் நடத்தபோவதாக ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் கூறுகிறார். | பள்ளி வன்முறை அரசு தன் கடமை செய்யாமை | தினகரன் |
| 23. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தை அடுத்த தனக்கன்குளம் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் மகாலிங்கம், இவரது மகள் ரம்யா(17), இவர் வறுமையில் உள்ள தனியார் வாலிடெக்னிக் கல்லூரியில் 2ம் ஆண்டு பயின்று வருகிறார். இவரை பெற்றோர் திட்டியதால் ரம்யா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார், இது குறித்து திருப்பரங்குன்றம் போலீஸார் வழக்கு பதிவு | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்து விசாரித்து வருகின்றனர். | | |
| 24. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** மகாத்மாகாந்திநகர் பகுதியில் ஊமச்சிகுளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெள்ளையன் மற்றும் போலீசார் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர் அதிகாலையில் 3 மணியாளவில் மகாத்மாகாந்தி நகர் பஸ்தநிலையம் அருகே டாஸ்மார்க் கடையின் எதிரே ஒரு பெண் தீயில் கருகி இறந்து கிடந்தார், இது தொடர்பாக போலீஸார் விசாரனை செய்து வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 25. | 21.10.09 | **ஈரோடு மாவட்டம்:** அவல்பூந்துறையைச் சேர்ந்த மணியன் மனைவி ஜெயமணி காங்கயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போஸாராக பணிபுரிந்தர், இவரை லாரி டிரைவர் ஜெயசங்கர்(எ)சங்கர் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 26. | 21.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல் பாண்டியன் நகரை சேர்ந்தவர் காமராஜ் இவரது மகள் பூமாரி(19) இவர் பட்டாசு ஆலையில் பணியாற்றினார் இவருடன் பணிபுரிந்தவரை காதலித்தார், காதலை வீட்டில் எதிர்த்ததால் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 27. | 21.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயக்குடி அருகே உள்ள வாலி நோக்கத்தில் ஜமத்தகளில் ரசீது போடுவதில் ஏற்பட்ட பிரச்சனையில் பொதுமக்களுக்கும் போலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 2 போலீசார் காயமடைந்தனர். 15 பேரை கைது செய்த போலீஸார் 40 பேரை தேடி வருகின்றனர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 28. | 21.10.09 | **மதுரை மாவட்டம்:** சின்னமாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் பழனிசாமி(29) இவரது மனைவி சுதா, இவரை இவரது கணவர், பழனிசாமி மற்றும் சமுத்திர பாண்டியம்மாள் சேர்ந்து சித்திரவதை செய்ததாக மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 29. | 21.10.09 | **தேனி மாவட்டம்:** பெரிய குளம் வட்டம் வடபுதுபட்டி அம்மாபட்டி கிராமத்தில் உள்ள தலீத்து மக்களுக்கு பலவிதமான தீண்டாமை கொடுமைகள் நடத்தப்படுகின்றன அவ்வூரில் உள்ள அங்கன் வாடியில் ஆசிரியர் தலீத் குழந்தைகளை மற்ற பிரிவினர் குழந்தைகளிடமிருந்த பிரித்து ஒதுக்கி | தலீத் எதிரான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைத்து நடத்துவதாக தேனி கண்காணிப்பாளரிடம் புகார். | | |
| 30. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் கட்டபொம்மன் நகரைச் சேர்ந்தவர் கணேசமூர்த்தி மகள் அன்புமணி கம்ப்யூட்டர் இன்ஜினியராக வேலை பார்த்த வந்தார் இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த அன்புமணி வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 31. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் மனைவி சுகன்யா திருமணமான 6 மாதங்களில் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதால் தீக்குறித்து தற்கொலை செய்து கொண்டார், இது குறித்து செல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 32. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலையை அடுத்த கண்ணனேந்தலை சேர்ந்தவர் ஜெசித்ரா இவரது வீட்டுக்கு வந்து குற்றவியல் அதிகாரி பிரபாகரன் மற்றும் அவரது வக்கீல் உதயகுமார் மிரட்டியதாக அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய உத்திரவிடக்கோரி மதுரை ஜகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி போலீசுக்கு மதுரை ஜகோர்ட் கிளை உத்தரவிட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 33. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவில் அருகே உள்ள தும்பக்குளம் முனியாண்டிபுரத்தைச் சேர்ந்த விவசாயி பகவதி இவரது நிலத்தில் காட்டுராஜா என்பவரது ஆடுகள் மேய்ந்த தகராறில் காட்டுராஜா பகவதி மற்றும் அவரது மனைவியை அடித்து உதைத்தார், இது குறித்து கூடக்கோவில் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 34. | 22.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே உள்ள சிந்தாமணி பர்மா காலனியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி இவர் தன் வீட்டு முன்பு காரை நிறுத்தி இருந்தார், அப்போது அதே பகுதியைச் சேர்ந்த 7 பேர் கொண்ட கும்பல் கார் முன்பு பட்டாசு வெடித்தனர். இதனை பார்த்த சுப்பிரமணியின் மகள் பிரேமா பட்டாசு வெடிக்காதீர்கள் என்று கூறிய பெண்னை மானபங்கப்படுத்தி சுப்பிரமணியை தாக்கினர். இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 35. | 22.10.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** கும்பகோணத்தைச் சேர்ந்தவர் பாஸ்கர் உயிரியில் நிபுணர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி உயிரியல் பூங்காவில் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். இருவரும் சென்னையை சேர்ந்தவர் குமார் இவரது மனைவி அனிதா, நர்ஸ் இவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விரும்பாக்கம் இளங்கே நகரில் தனது சகோதரி வீட்டிற்கும் ஆட்டோவில் செல்லும் வழியில் மேற்கண்ட இரு நபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இது குறித்து போலீஸில் புகார். | | |
| 36. | 22.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** திருவிதால் கேட்டையைச் சேர்ந்தவர் ராஜீ மனைவி அன்னம்மாள் இருவரும் ஆரல்வாய் மொழியில் செங்கல் ஆளையில் வேலை பார்த்து வந்தனர் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் செங்கல் ஆளையில் முன்பணம் வாங்கி ராஜீ மாயமானார். செங்கல் சூளை உரிமையாளர் முன்பணம் கேட்டு நெருக்கடி கொடுத்தால் அன்னம்மாள் தன் இரண்டு குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டார். | கொத்தடிமை | தினமலர் |
| 37. | 22.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் சி.எம்.நகரைச் சேர்ந்தவர் கணேசமூர்த்தி அதே ஊரைச் சேர்ந்தவர் நீர்மலா திருமணமாகி 9 வயதில் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். கணேசமூர்த்தி கேரளாவுக்கு வேலைக்கு சென்ற இடத்தில் குளு(19) என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். இதனை கண்டித்து நிர்மலாவை கணேசமூர்த்தி சூடுபோட்டு கழுத்தை நெரித்து கொலை செய்ய முயற்சி செய்ததாக ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 38. | 23.10.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே பேய்க்குளம் கிராமத்தில் நூறுநாள் வேலைத்திட்டத்தை பெருமாதக் காலமாக யாருக்கும் பணிகள் ஒதுக்கப்படவில்லை இதனால் கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை, இது தொடர்பாகயுள்ள எல்லா அரசு அதிகாரிகளை அனுகியும் தீர்வு காண இயலவில்லை இறுதியில் கிராமமக்கள் எம்.எல்.ஏ.லதாஅதியமான் அவர்களிடம் முறையிட்டனர் அவர் அதிகாரிகளிடம் பேசி ஆவண செய்வதாகக் கூறினார். | அரசு தன் கடமை செய்யாமை | தினமணி |
| 39. | 23.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலாம்பட்டி தாலுகா சிம்மநத்தம் ஊராட்சிக்குட்பட்டது. சுமிஒச்சானைபட்டி இங்குள்ள அரசப் பள்ளியில் ஏராளமான மாணவர்கள் படித்து வருகின்றனர், இப்பள்ளியில் 4ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை இது குறித்து ஊராட்சி நிர்வாகம், கிராமமக்கள் மூன்று மாதத்திற்கு முன்பு சந்தித்தும், வலியுறுத்தியுள்ளனர் ஆனால் மக்களின் கோரிக்கை நிறைவேறவில்லை மாணவர்களின் | அரசு தன் கடமை செய்யாமை & மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கல்வி பாதிக்கப்படுவதாகக் கூறி கிராமமக்கள் பேருந்துகளை சிறைப்பிடித்து சாலை மறியல் நடத்தினர். | | |
| 40. | 23.10.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கனை அடுத்த பொம்மதாசம் பட்டியைச் சேர்ந்தவர் விஜயா, கூலி தொழிலாளி, இவரது கணவர் தனபால் இறந்து விட்டார். இவர் தனது மகள் பிரியா அரசு பள்ளியில் 7–ம் வகுப்பு படிக்கிறார். இந்நிலையில் பிரியாவுக்கு திருமணம் நடப்பதாக கலெக்டர் சண்முகத்துக்கு தகவல் கிடைத்ததும் ஊத்தங்கரை தாசில்தார் மூலம் பிரியாவின் திருமணம் தடை பெற்றது. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 41. | 23.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜாபளையம் அருகே திருவேங்கடபுரத்தைச் சேர்ந்தவர் சேதுராஜ் இவர் தன்னுடைய நிலத்திற்கு பட்டா வாங்குவதற்கு தாலுகா அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் வெங்கடேஷ் 300 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டு 3 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 42. | 23.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி அருகேயுள்ள பாலசமுத்திரத்தைச் சேர்ந்தவர் நாகராஜ் இவர் தன் வீட்டுக்கு மின் இணைப்பு பெற மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். மின் இணைப்பு வழங்க 5.ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட மின்வாரிய உதவி, இன்ஜினியர், ராஜேந்திரன் லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 43. | 23.10.09 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோட, தீருப்பூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் சின்னமுத்து சிவக்குமார், காமராஜ் உள்ளிட்டோர் கோடங்கி தொழில் செய்து வருகிறார், இவர்களை கட்டப் பஞ்சாயத்து செய்து ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளனர், கட்டப்பஞ்சாயத்து ஈடுபடுடோர் மீது நடவடிக்கை எடுக்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். | சமூக புறக்கணிப்பு | தமிழ்சுடர் |
| 44. | 23.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆத்தூர் ஒன்றியம் , சின்னாளப் பட்டி, பூஞ்சோலை மற்றும் என்சி.சி. சாலையில் அமைந்துள்ள தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளிடம், சைக்கிள் நிறுத்த, கழிப்பறை சுத்தம் செய்ய வசூல் செய்ததால் பெற்றோர்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்தும், மாவட்ட கலெக்டரிடம் புகார் கொடுத்தனர். | பள்ளி வன்முறை | தமிழ் சுடர் |
| 45. | 23.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே மண்டல மாணிக்கம் கிராமத்தில் வசிப்பவர் கஸ்தூரி(26), இவருக்கும் நல்லதுரை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிராமத்தைச் சேர்ந்த செந்திவேலுவுக்கும் திருமணம் நடந்தது, தற்போது கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக அருப்புகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | | |
| 46. | 24.10.09 | **கரூர் மாவட்டம்:** வடக்கு காந்தி கிராமம் முத்து நகரைச் சேர்ந்த வீரமணி மகள் நிரோஷா இவரை கரூர் அரசு கலைக்கல்லூரி புவியியல் மூன்றாமாண்டு மாணவர்கள் யுவராஜ், ரகுமான், சதிஷ், மாருதி ஆம்னி வேனில் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக பசுபதி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 47. | 24.10.09 | **நாகப்பட்டிணம் மாவட்டம்:** வேட்டைக் காரணிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் விவசாயி, இவருக்கும் காரைக்கால் அடுத்த போலகத்தைச் சேர்ந்த கலைச் செல்வன் மகள் கனிமொழிக்கும் கடந்த 21–ந்தேதி திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த சோகத்தில் கனிமொழி மணமகன் வீட்டில் வாஸ்மால் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 48. | 24.10.09 | **கடலூர் மாவட்டம்:** டி.புனயூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோமதுரை விவசாயி, இவரது மனைவி சுதா, இவருக்கு 2 மகன்கள் உள்ளனர், கணவன், மனைவியிடையே ஏற்பட்ட தகராறில்<br>சுதா தன் இரண்டு மகன்களை குத்தி கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து வேப்பூர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 49. | 25.10.09 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்துறை அடுத்த கோணாப்பட்டு கிராமத்தில் 250க்கு மேற்பட்ட தலித் மக்கள் வசிக்கின்றனர். 15 ஆண்டுகள் போராடியும் இம்மக்களுக்கு மயான வசதியில்லை இந்நிலையில் சாமுடி மகன் ராஜா(40) என்பவர் இறந்துவிட்டார் புதைக்க சுடுகாடு இல்லாமல் அம்மக்கள் புதுபேட்டை சாலையில் பிணத்துடன் மறியாலில் ஈடுபட்டடனர். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 50. | 25.10.09 | **கோவை மாவட்டம்:** கோவை அரசு மருத்துவ கல்லூரியில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முத்துகுமார், ராமணா, கிருஷ்ணகிரியைச் சேர்ந்த லோகேஸ், சேலம் மேட்டூரைச் சேர்ந்த கார்த்திக், ஆகிய நான்கு மாணவர்கள் 3ம் ஆண்டு பயின்றனர், இவர்கள் மது அருந்திவிட்டு இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களை நிர்வாணப்படுத்தியும் அடித்து துன்புறுத்தியும் | பள்ளி வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளனர். இது குறித்து காவல் துறையினர் விசாரனை நடத்தி வருகின்றனர். | | |
| 51. | 26.10.09 | **நெல்லை மாவட்டம்:** ஏர்வாடி அருகே உள்ள கோதைசேரி நந்தகோபால் தெருவைச் சேர்ந்தவர் சுப்பையா, இவருடைய மனைவி பாலசரஸ்வதி(27), இவர் தன் தம்பிக்கு குழந்தை பிறந்ததால் பாலசரஸ்வதி நாங்குநேரி சென்று திரும்பும் வழியில் பாலசரஸ்வதி பாலியல் பாலத்காரம் செய்யப்பட்டு கொலை செய்துள்ளனர், இது குறித்து போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 52. | 26.10.09 | **கோவை மாவட்டம்:** கோட்டைமேட்டை சேர்ந்தவர் இப்ராகிம்ஷா(30), இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த அப்துல்கபூர் மகள் நதீராபானு என்பவருக்கும் 11 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் இப்ராகிஷா மற்றும் அவரது தம்பி பெரோஸ் சேர்ந்து நதீராபானுவை அடித்து சித்திரவதை செய்து மொட்டை அடித்தனர். இது குறித்து உக்கடம் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 53. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரத்தைச் சேர்ந்தவர் நாகராஜ் மகன் விக்னேஷ்வரன்(15), இவர் தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர் பள்ளிக்கு செல்லாததால் பெற்றோர் திட்டினர் இதனால் மனமுடைந்து வீட்டில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கரிமேடு போலீஸில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 54. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள பாலார்பட்டி ஊரைச் சேர்ந்தவர் கருப்பையா, இதே பகுதியைச் சேர்ந்த காமாயி என்பவர் கணவரைப் பிரிந்து வாழ்ந்தார், காமாயி கருப்பையாவுடன் குடும்பம் நடத்துவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இருவருக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையில் கருப்பையா காமாயியே எரித்து கொலை செய்ய முயன்றதாக உசிலம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 55. | 26.10.09 | **மதுரை மாவட்டம்:** காஜிமார் தெரு பகுதியைச் சேர்ந்தவர் நாகூர்சேட் கொத்தனார் இவரது மனைவி ரம்ஜான்பேகம்(28), குடும்ப தகராரின் காரணமாக ரம்ஜான்பேகம் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 56. | 27.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** குளச்சல் விகே.பி.தனியார் பள்ளி மாணவர்கள் முகேஷ், அசோக், நாஞ்சில், விக்னேஷ், ஆகிய மாணவர்கள் பள்ளி விட்டு விடு திரும்பும் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழியில் காரில் வந்த கும்பலால் கடத்தப்பட்டனர், அவர்களிடம் இருந்து தப்பி பரசேரி கம்யூனிஸ்ட் அலுவலகத்தில் தஞ்சம் புகுந்தனர். இது தொடர்பாக காவலர்கள் விசாரனை நடத்தி வருகின்றனர். | | |
| **57.** | 27.10.09 | **மதுரை மாவட்டம்:** பொன்னகரத்தைச் சேர்ந்த ரங்கராஜ் மனைவி கலைச்செல்வி, இவரது கணவர் ரங்கராஜ் நகை கடை வைத்துள்ளார்., இவரை டிஸ்பி மாறன் மற்றும் போலீஸார்கள் திருட்டு நகைகள் கைபற்றல் பிரச்சனை 8 நாட்களாக சட்டவிரோத காவல் செய்து சித்திரவதை செய்வதாக மதுரை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ததில், உயர் நீதிமன்றம் ஐ.ஜி விசாரிக்க உத்தரவு செய்துள்ளது. | காவல் நிலைய வன்முறை | தினமணி |
| **58.** | 27.10.09 | **மதுரை மாவட்டம்:** ஆண்டாள்புரம் பகுதியைச் சேர்ந்தவர் யூனுஸ்கான் இவரது மகள் தயூப்(14) இவரது நணபர் சகாயம் இருவரும் பள்ளிக்கு தனியார் காரில் பள்ளி சென்று திரும்புவர், கார் டிரைவர் மற்றும் கிளினர் தங்களது செல்போனில் மாணவர்களை ஆபாச படம் பிடித்து வீட்டில் காட்டிவிடுவதாக கூறி மிரட்டி 7 பவுண் தங்க நகைகளை பறித்ததாக சுப்பிரமணிபுரம் போலீஸில் புகார். | மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| **59.** | 27.10.09 | **தீண்டுக்கல் மாவட்டம்:** பழனி தொலைத் தொடர்புத் துறையில் சீனியர் அக்கவுண்டண்ட் ஆக ஏ.சவுந்திராஜன் பணிபுரிந்து இறந்தார். இவரது மனைவி நிர்மலா, நிர்மலாவிற்கு கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்டு பழனி தொலைத் தொடர்புத்துறையில் பணியாற்றுகிறார் இங்கு மேல் அதிகாரிகளாக பணிபுரியும் அசன் என்பவர் நிர்மலாவிடம் பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இது குறித்து உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **60.** | 27.10.09 | **சென்னை மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி அடுத்த தலையாரிப்பாளையம் கிராமத்தில் அரசினர் மேல் நிலைப்பள்ளியில் தூரப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் முத்துராஜ் 10ம் வகுப்பு படித்து வருகிறார். இவரிடம் பள்ளி நிர்வாகிகள் கூடுதல் கட்டணம் கேட்டதால் குடும்ப ஏழ்மை நிலை காரணமாக முத்துராஜ்ாவால் பணம் கட்ட இயலவில்லை இதனால் மனம் நொந்து முத்துராஜ் விஷம் குடித்து தற்கொலைக்கு முயற்சித்ததால் இது குறித்து ஆரம்பாக்கம் போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | மாலை மலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 61. | 28.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** காளையார்கோவில் மருது பாண்டியர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த வந்தவர்கள் இடையே திடீர் மோதலில் போலீஸார் தடியடி நடத்தினர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 62. | 28.10.09 | **மதுரை மாவட்டம்:** காருப்பாயூரணியை அடுத்த ஆண்டார் கொட்டாரத்தைச் சேர்ந்த பிச்சை இவருடையமகன் ராமகிருஷ்ணன் இவருக்கும் கார்த்திகை ஈஸ்வரி திருமணம் செய்து கொண்டனர்.கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தராறில் கணவர் தன் மனைவி மீது அம்மிகல்லை தூக்கி போட்டு கொலை செய்தும் தானும் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொர்டார். இது பற்றி போலீஸா விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 63. | 28.10.09 | **திருச்சி மாவட்டம்:** பெரிய மிளகுபாறையில் உள்ள அரசு பிசியோதெரபி கல்லூரியில் பரமத்தி வேலூரைச் சேர்ந்த பிரகாஷ், தர்மராஜ், அஜிம், படித்து வருகின்றனர். இவர்கள் அதே கல்லூரியில் படிக்கும் முதலாமாண்டு மாணவர் ஈரோட்டை சேர்ந்த சங்கரை ராகிங் செய்துள்ளனர் இது குறித்து கன்டோன்மெண்ட போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 64. | 28.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை சிலுக்குவார் பட்டியைச் சேர்ந்த அருள்ரேகாவை, ஆசிரியர் ஜான்பீட்டர், பாலியல் பலாத்காரம் செய்தார், மற்றும் அருள் ரேகா குடும்பத்தினரை மிரட்டிய ஆசிரியர் ஜான்பீட்டர் மற்றும் அவரது குடுபத்தினரை, கைது செய்ய கலெக்டர் உத்தரவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 65. | 28.10.09 | **சென்னை மாவட்டம்:** அசோக்நகரை சேர்ந்த சீனிவாசனின் மகள் ஸ்ரீவித்யா(30), அபிராமபுரத்தைச் சேர்ந்த கார்த்திக் இவர் ஸ்ரீவித்யாவை திருமணம் செய்து கொள்வதாக கூடி ஏமாற்றியுள்ளார் இது குறித்து போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 66. | 29.10.09 | **மதுரை மாவட்டம்:** கே.புதுரைச் சேர்ந்தவர் நடராஜன், இவர் தனியார் பள்ளி வாகனத்தில் டிரைவராக பணியாற்றினார். இவர் மாரடைப்பால் உயிரிழந்தார், இதையொட்டி சமுக நலப்பாதுகாப்பு திட்டத்தின் தன் கணவர்க்கு கிடைக்கும் அரசு நிதியுதவி 10 ஆயிரம் பெற அவருடைய மனைவி சரவணம்மாள் சமூக நல அலுவலகத்தை அனுகியபோது லஞ்ச பணத்திற்காக 10,000 ரூபாய்க்கான காசோலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 67. | 29.10.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி வட்டம் ராஜதானி கிராமம் சுந்தர்ராஜபுரத்தில் தாட்கோ மூலம் நிலம் இல்லாத மகளிர் 10 பேருக்கு 4 ஏக்கர் வீதம் கடமலைகுண்டு கிராமத்தில் விலைக்கு வாங்கபட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பல மாதங்கள் கடந்தும். சர்வே செய்ய உரிய கட்டணம் செலுத்தியும் நிலத்தை பிரித்துக் கொடுக்காததால் கவலையடைந்த தலித்துக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பரிதாபமாக உக்கர்ந்திருந்தனர். | தலீத்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 68. | 29.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் தாகுனிபாறை அருகே வேட்ராயிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் சின்ன சடயப்பன், இவரை ஸ்ரீவில்லிபுத்தூர் எல்லைக்குட்பட்ட காட்டுபிலாதுறை ரேஞ்சர் விசாரனை என்ற பெயரில் சட்டவிரோத காவலில் வைத்திருப்பதாகவும் சின்னசேடப்பன் வீடு திரும்பவில்லை | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 69. | 30.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரத்தில் இருந்து கச்சத்தீவு பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி தமிழக மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தினர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 70. | 30.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானலில் கொத்தடிமைகளாக இருந்த நாகலாந்து மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் மீட்கப்பட்ட திண்டுக்கல் அருணோதய குழந்தை தொழிலாளர் பாதுகாப்பு மையத்தில் வைப்பட்டுள்ளனர். கொத்தடிமைகளாக வைக்கப்பட்ட நடசத்திர விடுதி மீது நடவடிக்கை எடுப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் மா.வள்ளலாரிடம் புகார். | கொத்தடிமை | தினமணி |
| 71. | 30.10.09 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் இலவச கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்தைச் அடுத்து மேல்சான்றோர் குப்பம் அடுத்த மணியாரகுப்பத்தை சேர்ந்த கமலாம்மாள்(80) அம்சா (55), மற்றும் ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த அற்புதம், அமராவதி, அறுவை சிகிச்சைச் செய்தும் பார்வையற்றவர்காளாக உள்ளனர். திருவண்ணாமலை ஆஸ்பத்திரி மீது புகார். | | தினமணி |
| 72. | 30.10.09 | **மதுரை மாவட்டம்:** வாடிபட்டி அருகே நகரி பகுதியைச் சேர்ந்தவர் முனியாண்டி இவருடைய மகன் விஜய்ப்ரதீப் இவர் சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். இவருடைய அக்கா | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகன் சுமன் நகரில் உள்ள தனியார் பள்ளியில் படிக்கிறார் சம்பவத்தன்று சுமனை அவருடன் படிக்கும் மாணவர்கள் சிலர் தாக்கி உள்ளனர். இது குறித்து சுமன் தனது மாமாவிடம் தெரிவித்தார். விஜயப்ரதீப் அந்த சிறுவர், சிறுமியை 9 பேரை அரிவாள் கொண்டு தாக்கினார். இது குறித்து வாடிபட்டி காவல் நிலையத்தில் புகார். | | |
| **73.** | 30.10.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** அறந்தாங்கி அருகே கோட்டம் கல்லனை கால்வாய் நாகுடி பிரிவிலிருந்து கலக்கமங்கலம் வாய்காலில் குறைவாக தண்ணீர் வழங்காமல் 28 ஏரில் பாசனம் பகுதி விவசாயிகளை வஞ்சித்த நாகுடி பிரிவு உதவி செயற் பொறியாலர் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வயியுறுத்தி, இந்த சாலை மறியல் நடைபெற்றது. | அரசு அன் கடமை செய்யாமை | தீக்கதிர் |
| **74.** | 31.10.09 | **வேலூர் மாவட்டம்:** உதயேந்திரத்தை சேர்ந்தவர் முருகவேணி இவரது மகள் காயத்ரி(34), இவருக்கும் சென்னை ஐ.சி.எப். ரயில் பெட்டி ஆலை ஊழியர் சுப்பையாவுக்கும் திருமணம் நடந்தது . காயத்ரி பிரசவத்துக்காக மருத்துவமனை சென்றபோது காயத்திரி மற்றும் சுப்பையாவிற்க்கு இரத்த பரிசோதனை செய்தபோது சுப்பையா AIDS நோயினால் பாதிக்கப்பட்டது. தெரிந்தவுடன் சுப்பையா தன் பிறந்த குழந்தைக்கு பாதரசம் கொடுத்து கொலை முயற்சி செய்ததாக வாணியம்பாடி போலீஸில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **75.** | 31.10.09 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை அருகே உள்ள சுக்கம்பட்டியைச் சேர்ந்தவர் ஆறுமுகம், இவர் பைக்கில் மணப்பாறையில் இருந்து சுக்கம்பட்டிக்கு செல்லும் வழியில் எதிரே பைக்கில் வந்த புத்தாநத்தத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் மீது பைக் மோதியது தொடர்பாக சொந்த ஜாமீனில் விட மாணப்பாறை காவல் நிலைய எஸ்.ஐ.ராஜரத்தினம்––– ரூ1500 லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| **76.** | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கை மாவட்டம் நாச்சியார்புரத்தைச் சேர்ந்தவர் ஜாகிர் தன் குடும்பத்துடன் காரில் சென்றபோது ஏற்பட்ட விபத்தில் ஜாஷிகா(3) தவிர மற்ற அனைவரும் இறந்துவிட்டனர், ஜாஷிகா படுகாயம் அடைந்த நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்காமல் இறந்து விட்டார், இது குறித்து ஜாகீர் உறவினர்கள் மருத்துவமனையின் டீன் சிவகுமாரிடம் புகார் | அரசு ஊழியர் அலட்சிய போக்கு | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுத்ததின் பெயரில் சம்பந்தப்பட்ட டாக்டர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். | | |
| 77. | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** கீழவாடியைச் சேர்ந்த சொக்கன் மகன் சரவணன்(20), இவரை திருடியதாக சந்தேகப்பட்டு சூரமங்கலம் காவல் நிலைய காவலர் சித்திரவதை செய்ததாக மதுரை மருத்துவமனை காவலர்களிடம் புகார். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 78. | 31.10.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை அருகே உள்ள ஆமூரை சேர்ந்தவர் மூர்த்தி, இவரது உறவினர்கள் 6 பேர் சேர்ந்து கருத்தபுளியம்பட்டி கண்மாயில் சட்டவிரோதமாக மணல் அள்ளினர், இது குறித்து காசில்தார் சிராஜ்தீன் புகாரின் பேரில் 6 பேர் மீது மேலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மணல் கடத்தல் | தினகரன் |
| 79. | 31.10.09 | **புதுச்சேரி மாவட்டம்:** புதுச்சேரி அடுத்த வில்லியனூர் அருகே உள்ள மணக்குப்பத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன் இவரது மகன் ஸ்ரீதர்(16), இவர் வில்லியனூர் விவேகானந்தா அரசு மேல் நிலைப் பள்ளியில் பிளஸ் 1 கம்யூட்டர் சயின்ஸ் படிக்கிறார். இவரை பிளஸ்1 மாணவர்கள் ஐந்து பேர் கூட்டாகச் சேர்ந்து வகுப்பறைக்கு சென்ற ஸ்ரீதரை வழிமறித்து மாணவனை நீர்வாணமாக்கி ராகிங் செய்ததாக பாதிக்கப்பட்ட ஸ்ரீதரின் பெற்றோர் பொது சுகாதாரதுறை அமைச்சர் நமச்சிவாயம் அவர்களிடம் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்